# மாவட்ட மேலாளர், டாஸ்மாக்,தருமபுரி
# தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்
# (தமிழ்நாடு அரசு நிறுவனம்)

முகவரி: தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு எண்:2,பாரதிபுரம்,கலக்ட்ரேட் அஞ்சல், தருமபுரி–5

ந.க.எண்.680/2006/சி.வி.3 நாள்:18.11.2009

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின்(டாஸ்மாக்) சார்பில் நடத்தப்படும் மதுபானக் கடைகளில் தேங்கி இருக்கும் காலி அட்டைப் பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகளை 01.01.2010 முதல் 31.12.2010 வரை ஓராண்டிற்கு எடுத்து விற்பனை செய்து கொள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நியமனம் செய்து ஒட்டு மொத்த அனுமதி வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது.

டெண்டர் படிவம், டெண்டர் நிபந்தனைகள் குறைந்தபட்ச கேட்புத் தொகை போன்ற ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை தருமபுரி மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் **14.12.2009** பிற்பகல் **01.00** மணிவரை ஒப்பந்தப்புள்ளி ஆவணம் ஒன்றுக்கு ரூ.**500**/–(ரூபாய் ஐநூறு மட்டும்) (வாட் வரி நீங்கலாக) பணமாக அல்லது **மாவட்ட மேலாளர், டாஸ்மாக்,தருமபுரி** என்ற பெயரில் தருமபுரி மாவட்டத்தில் காசாக்க கூடியதான வங்கி வரைவோலை மூலமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். அஞ்சலக காலதாமதங்களுக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பொறுப்பல்ல. மாவட்ட மேலாளர், டாஸ்மாக் தருமபுரி என்ற பெயரில் முன் வைப்புத் தொகை ரூ.20,000/– செலுத்தப்பட வேண்டும்.

முன்வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். முன் வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டமைக்கு சான்றாக ஒப்பந்த நிபந்தனைகளின் கடைசியில் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். **14.12.2009** அன்று பிற்பகல் **04.00** மணிவரை மட்டும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். நிர்ணயிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு(அஞ்சலக தாமதம் உட்பட) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் முன்னிலையில் மாவட்ட மேலாளர், தருமபுரி டாஸ்மாக் அவர்களால், இவ் அலுவலகத்தில் **14.12.2009** அன்று பிற்பகல் **05.00** மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் காரணம் ஏதும் தெரிவிக்காமல் நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரமுண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட மேலாளர்/துணை ஆட்சியர்
டாஸ்மாக் லிட்,தருமபுரி